**இலங்கை சுற்றுலா மேம்படுத்தல் பணியகம் - 2019**

---

## 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இலங்கை சுற்றுலா மேம்படுத்தல் பணியகத்தின் 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றுகைக் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் பற்றிய கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் நிதிக்கூற்றுக்களுக்குரிய குறிப்புக்கள், முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளின் பொழிப்பினை உள்ளடக்கிய 2019 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கப்படும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் மற்றும் 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் ஏற்பாடுகளுக்கமைய இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டது. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்க வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் குறிப்பிடப்படப்பட்டுள்ள விடயங்களினால் ஏற்படும் தாக்கத்தினை தவிர்த்து, பணியகத்தின் 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப் பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

## 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் குறிப்பிடப்படப்பட்டுள்ள விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அவ் நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் இந்த அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

## 1.3 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக முகாமைத்துவத்தின் மற்றும் தொடர்புடைய தரப்பினரின் பொறுப்பு

இந்த நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, பணியகம் தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவொன்றாக தொடர்ந்து செயற்படுவதற்கான அதன் ஆற்றலினை மதிப்பீடு செய்தல், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவுடன் தொடர்புடைய விடயங்களை பொருத்தமானவாறு வெளிப்படுத்துதல் மற்றும் முகாமைத்துவமானது பணியகத்தினை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

பணியகத்தின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் பணியகத்தின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களின் புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

## 1.4 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பில் கணக்காய்வாளரின் பொறுப்பு

ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடிகள் அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளாதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்திற் கொள்ளப்படல் வேண்டும்.

என்னால் துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வு செய்யப்பட்டன. மேலும்,

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களில் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிரயாத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடும் பொருட்டு பணியகத்தின் உள்ளக கட்டுப்பாட்டின் ஆக்கபூர்வமானதன்மை தொடர்பாக அபிப்பராயமொன்றை தெரிவிப்பதற்கு கருத்து தெரிவிக்கவில்லை.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களின் பொருத்தமான தன்மையை மதிப்பீடு செய்தல்.

- பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளை அடிப்படையாகக் கொண்டு முகாமைத்துவத்தின் தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு பயன்பாட்டின் பொருத்தப்பாடுகள் தொடர்பிலும், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவிற்கு அமைய தொடர்ந்து செயற்படுவதற்கு நிறுவகத்திற்கு உள்ள ஆற்றல் தொடர்பில் குறிப்பிடத்தக்க ஐயப்பாட்டிற்கு காரணமாகவுள்ள நிகழ்வுகள் அல்லது நிலைமைகளுடன் தொடர்புடைய பொருண்மையான நிச்சயமற்ற தன்மை

காணப்படுகின்றதா என முடிவிற்குவருதல். பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்குவந்தால், அல்லது எனது அபிப்பிராயத்தினை மாற்றியமைப்பதற்கு அவ்வாறான வெளிப்படுத்தல்கள் போதியனவாக காணப்படாதிருக்கையில், நிதிக்கூற்றுக்களிலுள்ள வெளிப்படுத்தல்களுடன் தொடர்புபட்டுள்ள எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்துதல் வேண்டும். எனது கணக்காய்வு அறிக்கைத் திகதி வரையிலும் பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகள் எனது முடிவுகளிற்கு அடிப்படையாகக் காணப்படுகின்றன. எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் பணியகத்தின் தொடர்ந்தியங்கும் நிலையினை இடைநிறுத்துவதற்கு காரணங்களாக அமையலாம்.

- வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்காக அடிப்படையாக கொள்ளப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்களை பொருத்தமான அற்றும் நியாயமான முறையில் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளமையை மதிப்பாய்வு செய்தல்.

முடியுமான அளவு மற்றும் தேவையான எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பின்வருவனவற்றை பரீட்சிப்பதற்கு கணக்காய்வு விடயப் பரப்பும் விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

- தகவல்களை சமர்ப்பித்தல் தொடர்பில் பார்க்கப்படும் நிதியத்தின் பணிகளை தொடர்ச்சியான மதிப்பாய்வு செய்வதற்கு இயலக்கூடிய வகையில் அதன் ஒழுங்கமைப்பு, கட்டமைப்பு, நடைமுறைகள், புத்தகங்கள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதியளவிலும் திட்டமிடப்பட்டுள்ளதா எனவும் அதன் கட்டமைப்பு நடைமுறைகள், புத்தகங்கள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமான முறையில் பேணப்படுகின்றதாக,

- ஏதேனும் பொருத்தமான எழுத்துமூல சட்டமொன்றிற்கு அல்லது பணியகத்தின் கட்டுப்பாட்டு சபையினால் வெளியிடப்பட்ட பொது அல்லது விசேட ஏற்பாடொன்றிற்கு இணங்க பணியகம் செயற்பட்டுள்ளதாக,

- தமது அதிகாரங்கள், கடமைகள் மற்றும் பணிகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக.

- வளங்கள் சிக்கனமாகவும், வினைத்திறனாகவும் ஆக்கபூர்வமான கால எல்லையினுள் மற்றும் உரிய சட்டங்கள் மற்றும் விதிகளுக்கு இணங்க கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டுள்ளதாக,

## 1.5 நிதிக்கூற்றுக்கள்

### 1.5.1 இலங்கை கணக்கீட்டு நியமங்களுடன் இணங்காமை

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | நியமம் 02 இன் 25 மற்றும் 26 ஆம் பந்திகளின் பிரகாரம் காசுப்பாய்ச்சல் கூற்று தயாரிக்கும் போது நிலையான சொத்துக்கள் கைப்பற்றுதல் தொடர்பாக செலவிடப்படுகின்ற செலவுகள் ரூபா 23,226,559 | முன்னால் சரி செய்வதற்கான நடவடிக்கை எடுக்கப்படும். | நியமத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டியமை. |

| | | | |
|---|---|---|---|
| | என்பதுடன் வாகன விற்பனை இலாபம் ரூபா 4,371,000 மற்றும் நிதிக் குத்தகை பெறுமதி ரூபா 15,450,000 வேறுவேறாகக் காட்டப்பட்டிருக்கவில்லை. | | |
| (ஆ) | நியமம் 07 இன் பிரகாரம் ரூபா 3,082,050 ஆன கணனி மென்பொருட்கள் சம்பந்தமாக பெறுமானத்தேய்வு ஒதுக்கப்பட்டிருக்கவில்லை. | 2013 ஆம் ஆண்டு வரை கணக்குகளில் கணனி மென்பொருட்கள் நூற்றுக்கு 7.5 வீதத்தினால் பெறுமானத் தேய்விடப்பட்டன. அத்தேய்விடும் முறைமை தற்போது நீக்கப்பட்டுள்ளது. | நியமத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டியமை |
| (இ) | நியமம் 19 இன் 61 ஆம் பந்தியின் பிரகாரம் பணிக்கொடை ஒதுக்கம் கணக்கிடும் போது எண்கணித மதிப்பீட்டு நுட்பத்தைப் பயன்படுத்தி நம்பகமான மதிப்பீடு செய்யப்பட வேண்டியபோதிலும், அதற்கு இணங்கியதாக அன்றி உத்தியோகத்தர் இறுதி வருடத்தில் பெற்ற சம்பளம் மற்றும் சேவைக் காலத்தின் அடிப்படையில் மட்டும் ரூபா 14,986,829 பணிக்கொடை ஒதுக்கம் மேற்கொள்ளப்பட்டிருந்தது. | முன்னால் அதன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படும். | நியமத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டியமை. |

### 1.5.2 கணக்கீட்டுக் குறைபாடுகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 2015 ஆம் ஆண்டின் போது கொள்வனவு செய்யப்பட்ட ரூபா 6,600,000 கிரயமான வாகனம் ஒன்று 2018 ஆம் ஆண்டிற்காக தேய்மான ஒதுக்கம் செய்யப்படாது மீளாய்வாண்டின் இறுதியில் தேய்மான ஒதுக்கம் ரூபா 1,650,000 இனால் குறைத்துக் கணக்குகளில் காட்டப்பட்டிருந்தது. | கணக்காய்வுடன் இணங்குகின்றேன். | தேய்மான ஒதுக்கம் சரியாக சீராக்கப்பட வேண்டியமை. |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | நிலையான சொத்து விற்பனை இலாபம் கணக்கிடப்பட்ட போது அதற்காகச் செய்யப்பட்ட சகல செலவுகளும் கருத்திற் கொள்ளப்பட வேண்டிய போதிலும், மீளாய்வாண்டில் ரூபா 4,471,000 இற்கு விற்கப்பட்ட 2 வாகனங்கள் தொடர்பாக இலாபம் கணக்கிடப்பட்டபோது பத்திரிகை விளம்பரம் தொடர்பாகச் செய்யப்பட்ட செலவு ரூபா 408,529 கருத்திற் கொள்ளப்படாது இலாபம் கணக்கிடப்பட்டிருந்தது. | கணக்காய்வுடன் இணங்குவதுடன் முன்னால் திருத்தம் செய்வதற்கான நடவடிக்கை எடுக்கப்படும். | நிலையான சொத்துக்கள் விற்பனையின் போது அதற்கான சகல செலவுகளும் சொத்துக்களின் பெறுமதியுடன் கூட்டப்பட வேண்டியமை. |
| (இ) | 2010 ஆம் ஆண்டிலிருந்து மீளாய்வாண்டு வரையில் பணியகத்தின் தலைமைக் காரியாலயம் மற்றம் தகவல் மத்திய நிலையம், இலங்கை சுற்றுலாத்துறை அபிவிருத்தி அதிகாரசபையின் கட்டிடத்தில் நடாத்தப்பட்டு வருவதால் அதற்காகச் செலுத்தப்பட வேண்டிய ரூபா 75,125,536 கட்டிட வாடகை நிதிக் கூற்றுக்களில் காட்டப்பட்டிருக்கவில்லை. | இது சம்பந்தமாக அதிகார சபைக்குத் தெரியப்படுத்தியதுடன் நிதி மதிப்பு தொடர்பாக இரு தரப்பினருக்கு மிடையில் இதுவரை எந்தவொரு சட்ட உடன்பாடும் எட்டப்படாமையால் எதிர்காலத்தில் இரு கட்சிகளுக்கிடையிலான உடன்படிக்கை தொடர்பாக நடவடிக்கை எடுக்கப்படும். | கட்டிட வாடகை நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட வேண்டியமை. |
| (ஈ) | மீளாய்வாண்டின் போது இலங்கை இராணுவப் படையினருக்கு ரூபா 4,594,902 கிரயமான கணனி, அலுவலக உபகரணம், தளபாடங்களும் பொருத்திகளும் மற்றும் நானாவித உபகரணங்கள் வழங்கப்பட்டதுடன் அப்பெறுமதி ரூபா 1,619,645 ஆல் குறைத்துக் கணக்குகளில் நீக்கப்பட்டிருந்தது. | கணக்காய்வு அவதானிப்புடன் இணங்குகின்றேன். | கணக்கீட்டுக் குறைபாடு திருத்தப்பட வேண்டியமை. |
| (உ) | மீளாய்வாண்டின் நிதிக் கூற்றுக்களின் பிரகாரம் இலங்கைச் சுற்றுலாத்துறை | வேறுபாட்டை இனங்காண்பதற்கு நடவடிக்கை | வேறுபாட்டிற்கான காரணத்தைக் கண்டுபிடித்துக் |

| | | |
|---|---|---|
| அபிவிருத்தி அதிகாரசபைக்கு செலுத்த வேண்டிய தொலைபேசி, சுகாதாரம் மற்றும் பாதுகாப்புக் கட்டணம் ரூபா 53.531,048 என்பதுடன் அதிகாரசபையின் நிதிக் கூற்றுக்களின் பிரகாரம் செலுத்த வேண்டிய நிலுவை ரூபா 33,267,512 என்பதனால் அந் நிலுவைகளுக்கிடையே ரூபா 20,263,536 ஆன வேறுபாடு அவதானிக்கப்பட்டது. | எடுக்கப்பட்டு வருகின்றது. | குறிப்பிட்ட திருத்தங்களைச் செய்ய வேண்டியமை. |

### 1.5.3 கணக்காய்விற்கான எழுத்துமூலமான சான்றுகள் இன்மை

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| விடயம் | | பணம் ரூபா | வழங்கப்படாத கணக்காய்வு சான்று | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|---|---|
| (அ) | தூதராலய காரியாலயங் களிடமிருந்து பெற வேண்டிய பணம் | 7,991,128 | அட்டவணைகள் அல்லது மீதி உறுதிப்படுத்தல் | குறித்துக் கொள்ளப்பட்டது. | அட்டவணைகள் அல்லது உறுதிப்படுத்தல்கள் சமர்ப்பிக்கப்பட வேண்டியமை. |
| (ஆ) | தூதராலய காரியாலயங் களுக்காக வழங்கப்பட்டிருந்த தீர்க்கப்படாத முற்பணம் | 86,214,842 | மீதி உறுதிப்படுத்தல் கள் | இத்தொகையை தீர்ப்பதற்கான நடவடிக்கை முன்னால் எடுக்கப்படும். | குறிப்பிட்ட மீதிகளுக்கான உறுதிப்படுத்தல் தாமதமின்றி சமர்ப்பிக்கப்பட வேண்டியமை. |

## 1.6 பெறவேண்டிய கணக்கு மற்றும் கொடுக்க வேண்டிய கணக்கு

### 1.6.1 பெறவேண்டிய கணக்கு

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | பணியகத்தின் 8 நாடுகளுக்கான தூதராலயக் காரியாலயங்களுக்காக வழங்கப்பட்டிருந்த ரூபா 13,774,194 ஆன முற்பணத் தொகை வருடத்தைக் கடந்தும் இன்றும் தீர்க்கப்படுவதற்கான நடவடிக்கை எடுக்கப்படவில்லை. | முற்பணத் தொகையைத் தீர்ப்பதற்கான நடவடிக்கை முன்னால் எடுக்கப்படும். | பெறவேண்டிய மீதிகள் விரைவில் அறவிடப்பட வேண்டியமை. |

| | | |
|---|---|---|
| (ஆ) மீளாய்வாண்டின் இறுதியின் போது பெற வேண்டிய ரூபா 277,917,521 ஆன மீதியினுள் 5 வருடங்களுக்கு மேற்பட்ட காலத்திலிருந்து பேணப்பட்டு வரும் மீதிகள் ரூபா 3,304,920 அறவிடப்படாததுடன் அதற்காக முழுமையான கடன் ஒதுக்கம் ஏற்படுத்தப்பட்டிருந்தது. | கணக்காய்வு அவதானிப்புடன் இணங்குகின்றேன். | பெறவேண்டிய மீதிகள் விரைவாக அறவிடப்பட வேண்டும். |

**1.6.2 கொடுக்க வேண்டிய கணக்கு**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|
| நானாவித கடன் கொடுத்தோரின் கீழ் காட்டப்பட்டிருந்த ரூபா 53,531,048 ஆன மீதியினுள் ரூபா 8,103,211 ஆனது 5 வருடங்களுக்கு மேற்பட்டதும் ரூபா 2,344.090 ஆனது 5 இற்கு குறைவானதும் 3 வருடங்களுக்கு மேற்பட்டதும் ரூபா 12,070,254 ஆனது 4 வருடங்களுக்கு குறைவான 2 வருடத்திற்கு மேற்பட்ட காலமாகப் பேணப்பட்டு வரும் நிலுவைகளை உள்ளடக்கியுள்ளது. | இம்மீதியினுள் உள்ளடக்கப்பட்ட சுற்றுலாத்துறை அபிவிருத்தி அதிகாரசபைக்குச் செலுத்த வேண்டிய கட்டிடக் கூலி மற்றும் 2014 ஆம் ஆண்டின் 3 மாதங்களுக்காக தொலைபேசிக் கட்டணம் மீதியாக ரூபா 8,103,211 உடன் தொடர்பானவை எதிர்காலத்தில் அதிகாரசபையுடன் பேச்சுவார்த்தை நடாத்தி அதன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படுவதுடன் ரூபா 14,414,343 பெறுமதியான பற்றுச்சீட்டுக்கள் பெறப்படவில்லை. | செலுத்த வேண்டிய மீதிகள் தீர்க்கப்பட வேண்டியமை. |

## 1.7 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் என்பவற்றுடனான இணக்கமின்மை

சட்டங்கள், விதிகள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்கள் என்பவற்றுடனான இணங்காத சந்தர்ப்பங்கள் கீழே காட்டப்படுகின்றன.

| | சட்டங்கள், விதிகள் பிரமாணங்கள் என்பவற்றுடனான தொடர்பு | இணக்கமின்மைகள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|---|---|
| (அ) | 2005 இன் 38 ஆம் இலக்க சுற்றுலா அலுவல்கள் சட்டத்தின் VII ஆம் அத்தியாயத்தின் 40 ஆம் பிரிவின் 09 ஆம் உப பிரிவு | பிரிவின் பிரகாரம் ஒவ்வொரு பஞ்சாங்க ஆண்டு முடிவடைந்து மூன்று மாதங்கள் முடிவடைவதற்கு முன்னர் பணியகத்தின் செயற்பாடுகள் தொடர்பில் அவ்வாண்டினுள் சமர்ப்பிக்கப்பட வேண்டிய அறிக்கைகள், வெளியீடுகள் மற்றும் திட்டங்கள் போன்றன அமைச்சருக்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்க வில்லை. | குறித்துக் கொள்ளப்பட்டது. | சட்டத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம் சமர்ப்பிக்கப்பட வேண்டிய அறிக்கைகள் சமர்ப்பிக்கப்பட வேண்டியமை. |
| (ஆ) | இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப்பிரமாணக் கோவை | | | |
| (i) | நிதிப்பிரமாணம் 102 மற்றும் 104 | ரூபா 308,700 பெறுமதியான மூன்று லெப்டொப் கணனிகள் தொலைந்து போனமை தொடர்பில் நிதிப் பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படவில்லை. | கணனிப் பாகங்களை இனங்காண்பதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதுடன் தகவல்கள் முன்னால் வழங்கப்படுவதற்கான நடவடிக்கை எடுக்கப்படும். | பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டியமை. |
| (ii) | நிதிப்பிரமாணம் 169(2) | 2016 ஆம் ஆண்டில் மதிப்பிழந்த ரூபா 220,000 பெறுமதியான 03 காசோலைகள் தொடர்பில் | மதிப்பிழந்த காசோலைகள் தொடர்பாக குறிப்பிட்ட உத்தியோகத்தர்கள் | மதிப்பிழந்த காசோலைகள் தொடர்பாக பிரமாணத்தின் பிரகாரம் |

| | | | | |
|---|---|---|---|---|
| | | இப்பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடக்கப்படவில்லை. | அறிவூட்டப்பட்டிருப்ப துடன் முன்னால் தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்படும். | நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (iii) | நிதிப்பிரமாணம் 756 | மீளாய்வாண்டிற்குரிய நிலையான சொத்துக்களின் பொருட் கணிப்பீடு மேற்கொள்ளப்பட வில்லை. | 2018 ஆம் வருடத்திற்குரிய நிலையான சொத்துக்கள் கணிப்பீட்டு அறிக்கை தற்போது முடிக்கப்பட்டுள்ளமை யுடன் பொருட்களை இனங்காண்பது தொடர்பாக தற்போது நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது. | உரிய காலப்பகுதியினுள் நிலையான சொத்துக்களுக்கான பொருட் கணிப்பீடு செய்யப்பட வேண்டும். |

**2. நிதி மீளாய்வு**

**2.1 நிதி விளைவுகள்**

மீளாய்வாண்டின் நிதி விளைவுகள் ரூபா 282,382,760 ஆன மிகையாக இருந்ததுடன் அதற்கொத்த கடந்த வருடத்தின் மிகை ரூபா 1,644,798,552 ஆகும். அதன் பிரகாரம் நிதி விளைவுகளில் ரூபா 1,362,415,792 ஆன பின்னடைவு அவதானிக்கப்பட்டது. இப்பின்னடைவுக்கு மீளாய்வாண்டின் விலகல் வரி வருமானம் ரூபா 514,972,943 இனால் மற்றும் சுற்றுலாத்துறை அபிவிருத்தி வரி வருமானம் ரூபா 380,416,981 இனால் குறைவடைந்தமை மற்றும் சந்தைப்படுத்தல் செலவுகள் ரூபா 448,175,159 இனால் அதிகரித்தமை பிரதானமான காரணங்களாக இருந்தன.